DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | அன்புச்செழியன் |
| Father's Name | : | அன்னவேல். K |
| Village | : | மருதிப்பட்டி |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Profession | : | MVI G – I, கிருஷ்ணகிரி |
| Age | : | 59 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 07th day of November 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – I ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.06.2020 அன்று பணியில் இருந்த போது குருபரப்பள்ளி காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் பெற்று குற்ற எண்.510/2019 U/s.279, 337, 304A IPC வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்து வாகனம் KA 05 MC 1125 என்ற இலகு ரக வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த சேதாரம் பின்வருமாறு :

1.முகப்பு கண்ணாடி உடைந்திருந்தது.
2.டேஸ் போர்டு உடைந்திருந்தது.
3.முன்புற பானட், காற்று குளிர்விப்பான் மற்றும் நீர் குளிர்விப்பான் ஆகியவை உட்புறமாக வளைந்திருந்தது.
4.முன்புற முகப்பு விளக்கு இரண்டும் உடைந்திருந்தது.
5.AC Wire முழுவதுமாக உட்புறம் அழுத்தப்பட்டிருந்தது.
6.முன்புறம் வலது கதவு மற்றும் ஸ்பெண்டர் சேதாரம் ஏற்பட்டிருந்தது.
7.Steering column மற்றும் ஓட்டுநர் இருக்கை வளைந்திருந்தது.

வாகனம் இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்தது. இவ்விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டது அல்ல என சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இதே வழக்கில் சம்பந்தப்பட்ட இலகு ரக வாகனம் KA 51 MC 6496 என்ற வாகனத்தை அலுவலகத்தில் வைத்து 23.06.2020 அன்று ஆய்வு செய்தேன். அதில் ஏற்பட்டிருந்த சேதாரம் பின்வருமாறு :

1.முகப்பு கண்ணாடி உடைந்திருந்தது.

2.முன்புற பானட் உட்புறமாக வளைந்திருந்தது.

3.காற்று மற்றும் நீர் குளிர்விப்பான் உட்புறமாக வளைந்திருந்தது.

4.ஸ்பிளண்டர் இரண்டும் சேதாரம் ஏற்பட்டிருந்தது.

5.Wiper tank உடைந்திருந்தது.

6.Steering wheel வளைந்திருந்தது.

7.முகப்பு விளக்கு இரண்டும் உடைந்திருந்தது.

வாகனம் இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்தது. இவ்விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டது அல்ல என சான்று வழங்கினேன். இந்த சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

பொதுவாக விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை எத்தனை நாட்களுக்குள் ஆய்வு செய்ய வேண்டும் என்றால் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும். இந்த வழக்கில் 6 மாதம் கழித்து தான் ஆய்விற்கு கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் வெவ்வேறு நாட்களில் தான் ஆய்விற்கு கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். 6 மாத கால இடைவெளியில் வாகனங்களில் மாற்றம் செய்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஆவண அறிக்கையின் படி இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக மோதி உள்ளது என்றால் சரிதான். ஆய்வின் போது KA 51 MC 6496 என்ற வாகனத்திற்கு காப்பீட்டு நகல் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். மற்றொரு வாகனம் KA 05 MC 1125 என்ற வாகனத்திற்கு காப்பீடு நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், அது நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.